Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC. NO. 304/2020 Date: 22.05.2023
Deposition of witness for prosecution: PW1(LW1) - மோகனசுந்தர்

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 22.05.2023 TIME 12.50 பிஎம்

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)

**சாட்சி சிஆர்எம்பி எண் 4733/2022 மனுவின் மீது அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இருசக்கர வாகனத்தில் மூன்று நபர்கள் நான், எனது அண்ணன், சுந்தர் ஆகியோர் சென்றோம். இரண்டு நபர் தான் பயணம் செய்யவேண்டும் என்றால் சரிதான். மூன்று நபர்கள் பயணம் செய்ததால் தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. வாகனம் ஓட்டிய சுஜித் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். நாங்கள் சென்ற வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றால் சரிதான். நாங்கள் மூன்று நபர்கள் தலை கவசம் அணியவில்லை. சுஜித் பைக் ஓட்டியவர் என்றால் சரிதான். எனது அண்ணன் என்னைவிட உயரம் என்றால் இருவரும் சம உயரம் தான். நான் மூன்றாவதாக அமர்ந்திருப்பதால் எதிரே சாலை தெரியவில்லை என்றால் சரியல்ல. புகாரில் முதல் விசாரணையில் கூறியதுபோல் காயம் இருப்பதாக கூறவில்லை என்றால் சரிதான். லேசான காயம் இருந்தது. ஆம்புலன்ஸ் விபத்து நடந்த இடத்திற்கு வரவில்லை. ஆட்டோவில் தான் சென்றார். நான் ஆட்டோவில் செல்லவில்லை. சம்பவம் நடந்த பிறகு எதிரியின் வாகனம் மற்றொரு வாகனத்தில் மோதி கீழே கிடந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவத்தின் போது நாங்கள் இருசக்கர வாகனத்தில் வேகமாக வந்து, மேற்கு புறமாக திரும்பி சுபா என்ற தனியார் பேருந்து, மீது மோதிவிட்டோம் என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது, பொது ஜனங்கள் பார்த்தார்கள் என்றால் சரிதான். புகார் மனுவில் கவனமாக வண்டி ஓட்டி வந்ததாக கூறவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. இழப்பீடு பெற சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து படித்து பார்த்து விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

/ஒம்/ A. இராமநாதன், BA., BL.,
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.